www.padippakam.com

Raya

124

# இனிய தமிழ் மக்களே!

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

E.P.R.L.F



ழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

ELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்.' என்று அறை கூவினானே பாரதி. அவன் கனவுகள் ஈழத்தில் உண்மையாகும் நாள் வேண்டும்.

அன்புக்குரிய எமதினிய தமிழ் மக்களே!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்ட தொழிலாளர்கள் விவசாயிகளின் பிள்ளைகள் நாங்கள்.

இன்று எங்கள் கைகளில் ஆயுதங்கள். அவை எதற்காக?

சுரண்டலும் ஒடுக்கு முறையும் இனியும் தொடர வேண்டும் என்பதற்காகவா........

இல்லவேஇல்லை ... அந்நிலைமையை மாற்றியமைப்பதற்காகவே.

ஒரே தமிழினத்தை நாங்கள் என்றைக்கும் பார்த்ததில்லை

சுரண்டும் தமிழினம், சுரண்டப்படும் தமிழினம்

என இரண்டு தமிழினத்தைத்தான் இத்தனை ஆயிரம் ஆண்டுகளாகப் பார்த்திருக்கிறோம்.

சுரண்டும் தமிழினத்தார் எங்களை ஏமாற்றுவதற்காக எத்தனை ஆயிரம் வேடங்களைப் போடுவார்கள் என்பதைப் பார்த்துப் புரிந்து விட்டோம்;

எத்தனை நூற்றுவகையான நாடகங்களை நடத்துவார்கள் என்பதை நாங்கள் கண்டு பழகிவிட்டோம்.

இனியுமா எங்களை ஏமாற்ற முடியும்?

நாங்கள் ஒரே தமிழினம் என்னும் உணர்வு உருவாக வேண்டும் என்று விரும்புகிறோம் —அது எப்படி?

சுரண்டப்படும் தமிழினமாகிய நாங்கள், எங்கள் மீது சுரண்டும் தமிழினத்தார் தொடர்ந்தும் சுரண்டிக் கொண்டிருக்க

நாங்கள் அதை மறந்துவிடுவது போல் எங்களை நாங்களே ஏமாற்றிக் கொள்ளும் வகையால் அல்ல;

மாறாக, சுரண்டும் தமிழன் — சுரண்டப்படும் தமிழன் என்னும் நிலையை இல்லாமல் ஒழித்துக்கட்டுவதன் மூலமாகவே ஒரே தமிழினம் என்னும் உணர்வும், அதன் அடிப்படையிலான உண்மையான ஒற்றுமையும் நிலவும் என்று கூறுபவர்கள் நாங்கள்.

அந்த வகையிலான தமிழின ஒற்றுமையை நிலைநாட்டும் சமதர்ம ஈழத்துக்காகப் போராடுபவர்களே நாங்கள்.

அறா வட்டிக்காரன், சாதிய வியாபாரி' கள்ளக்கடத்தல்காரன், ஊரை ஏமாற்றிக் கொள்ளையடிப்போன்......

இவர்கள்தான் சமுதாயத்தில் பெரியவர்கள்! அவர்கள் தீர்மானப்படிதான் சமுதாயத்தில் சட்டமும் நீதியும் நிர்வாகமும்

படிப்பகம்

www.padippakam.com



செயற்படும் என்னும் நிலையை அறவே ஒழித்துக்கட்டும் நோக்குடன் நாங்கள் படை நடத்துகிறோம்.

நாங்கள் மேற்குறிப்பிட்ட அயோக்கியர்களின் அடிதடியாட்கள் அல்ல. அவர்களைப் பாதுகாப்பதும் அவர்களுக்கு வக்காலத்து வாங்குவதும் எமது தொழிலல்ல. துஷ்டநிக்கிரகம் செய்வதும் எங்கள் வரலாற்றுக் கடமை.

துஷ்டர்கள் யாராயிருந்தாலும், துஷ்டத்தனம் எந்த வடிவில் வந்தாலும் எங்கள் கைகளிலுள்ள ஆயுதங்கள் இயல்பாகவே குறிபார்க்கும்.

நாங்கள் எமது தேசத்தின் பரந்துபட்ட மக்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பவர்கள்

நாங்கள் தவறுகளே விடாத — விடமுடியாத அதீதப் பிறவிகள் அல்ல.

ஆனால், தவறு என்று காண்கின்றபோது — மற்றவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றபோது திருத்திக் கொள்பவர்கள்.

தவறுகளைக் கண்டறிதல், சுயவிமர்சனம் விமர்சனத்துக்கு உட்படுத்துதல், சரியான திசை நோக்கி முன்னேறுதல் என்னும் இயங்கியற் பொருள் முதல் வாதத்தின் வழியில் செயற்படுபவர்கள் தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள்

எங்கள் ஒவ்வொருவரினதும் கைகளிலுள்ள துப்பாக்கிகள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்னும் ஸ்தாபனத்தின் ஜனநாயகபூர்வமான முடிவுகளால் வழிநடத்தப்படுகின்றன.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், ஆத்திரங்கள், பொறாமைகளால் வழிநடத்தப்படுபவர்களல்ல.

தோழர்கள் யார்? நண்பர்கள் யார்? பகைவர்கள் யார்?

என்பதுபற்றி எமக்கு அரசியற் கோட்பாடு உண்டு. அதன் வழியினின்று வழுவாத செயற்பாடுண்டு.

மற்றவர்கள் குழு அமைத்துப் போராடுகின்றார்கள். அதுபோல் ஒரு தனிக் குழுவாக நின்று நாங்களும் போராடுகின்றோம்' என்னும் போட்டிக் கடை மனோபாவம் உடையவர்கள்ல நாங்கள்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது வரலாற்றுக் கட்டாயத் தேவைகளினால் உருவாக்கப்பட்ட சக்தியாகும். அதற்கென திட்டவட்டமான வரலாற்றுக் கடமைகள் உள்ளன.

அந்தக் கடமைகள் நிறைவேறும் நாள்வரை—

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாபெரும் சக்தியாக மேலும் மேலும் வளர்ந்தே தீரும்.

படிப்பகம்

www.padippakam.com

# 1

**தோழர்களே!**
**நண்பர்களே!**

புலிகளும் அதன் ஆதரவாளர்களும் இப்போதுள்ள தமது தேவைகளுக்காக எம்மைப்பார்த்து 'இந்திய ஆதரவாளர் கள்' என முத்திரை குத்தி எம்மை மக்களிலிருந்து தனிமைப் படுத்த முயற்சிக்கின்றார்கள்.

இவ்விடயத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால்—

புலிகளும் அதன் ஆதரவாளர்களும் என்னதான் இந் திய விரோத பிரச்சாரத்தில் ஈடுபட்ட போதிலும் அவ்வாறான பிரச்சாரங்கள் மூலம் இந்தியாவுக்கு நெருக்கடியை உருவாக்கி இந்தியாவானது புலிகளுக்கு மட்டும் ஆதரவு அளிக்கும் நிலையை உருவாக்குவதையே உள்நோக்கமாகக் கொண்டிருக்கி றார்கள் என்பதையும்,

இந்தியப்படைகள் தவிர்க்க முடியாத வகையில் L.T.T.E யுடன் யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற போதிலும் இந்தியாவின் நோக்கம் புலிகளை முற்றாக நிராகரிப்பது என்பதல்ல;

மாறாக, அதனை தனது அரசியல் வழிக்குள் கொண்டு வருவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது என்பதையும்,

அதற்காக இந்தியா மீண்டும் புலிகளுக்கு விட்டுக்கொடுப் புக்களை மேற்கொள்ளலாம் என்பதற்கான சாத்தியக் கூறுக ளையும் நாம் மறுப்பதற்கில்லை.

அவ்வாறு ஏற்படுகின்றபோது இதே புலிகளும் அதன் ஆதரவாளர்களும் மீண்டும் உரத்த குரலில் இந்தியாவுக்கு வாழ்த்துப்பா பாடத் தொடங்கி விடுவார்கள் என்பதையும் நாம் தெளிவாகப் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியமா கும்.

எனவே இன்றைய அரசியற் சூழ்நிலையில் ஆங்காங்கே ஏற் படவிருக்கும் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரச் சலசலப்புகளிற்கு எம்மையும் நாம் உட்படுத்திக் கொள்வோமாயின்—



படிப்பகம்

www.padippakam.com

அது மிக விரைவில் எம்மை நாமே தனிமைப்படுத்தும் தற்கொலை முயற்சியாகிவிடும் என்பதில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

இதே வேளை இந்தியப்படைகளிற்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த யுத்தத்தில் எமது மக்களின் உயிர்களிற்கும், உடமைகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டதின் விளைவாக எமது மக்கள் மத்தியில் இந்தியப்படையினர் மீது ஒரு வகையான ஆத்திரம் ஏற்பட்டிருப்பதென்பது உண்மையேயாகிலும், அதை வைத்துக்கொண்டு எமது மக்கள் இந்தியாவிற்கு விரோதத்தனமான அரசியல் உணர்வைக் கொண்டிருக்கிறார்கள் என நாம் முடிவுக்கு வருவோமாயின் அது தவறாகும்.

ஏனெனில், எந்தப்படையினர் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் எமது மக்களும் பாதிக்கும் வகையில் நடந்து கொண்டார்களோ,

அவர்களேதான் எமது மக்களுக்குத் தேவையான சிவில் நிர்வாகத்தைச் சீரமைக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்;

நிதி, நீதி நிர்வாகங்கள் தடையின்றி ஓடும் நிலைமைகளை உருவாக்க வேண்டியவர்களாக உள்ளனர்;

மின்சாரத்தை, தொலைத் தொடர்புகளை, குடிநீர்வசதி வசதிகளை, போக்குவரத்துக்களை ஒழுங்கமைக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்;

வைத்திய சேவைகளைப் புனரமைக்கவும் வசதிகளைக் கூட்டவும் வேண்டியவர்களாக உள்ளனர்;

சிறீலங்கா இராணுவத்திடமிருந்தும், சிங்கள ஊர்காவல் படையிடமிருந்தும் எமது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களாக உள்ளார்கள்;

கல்வி அமைப்புக்கள் மீண்டும் தடையற்று இயங்க வழிவகுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்;

மற்றும் ஏற்பட்ட அழிவுகளை புனரமைக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

மேற்கண்ட புனரமைப்பு வேலைகளை இந்திய சமாதானப்படையினர் செய்கிறார்கள் என்பதற்காக அவர்கள் செய்த அட்டூழியங்களை நாம் மறந்துவிடவில்லை.

ஆயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்கும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அழிந்ததற்கும் காரணமாவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இதுமாத்திரமல்லாமல், பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இவர்கள் கற்பழிப்புக்கள் உட்பட பெண்களிடம் தகாத முறையில் நடந்துள்ளனர்.

இக்கொலைகளை நிறுத்தவும், மக்களுக்கு — குறிப்பாகப் பெண்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை நிறுத்தவும் இந்திய மத்திய அரசிற்கு எமது கண்டனங்களைத் தெரிவித்ததுடன்,

இவற்றைச் சீர்செய்ய எட்டு அம்சங்களைக் கொண்ட எமது ஆலோசனைகளையும் இந்திய மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம்.

இது தொடர்பாக இந்திய அரசால் சில திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வைத்தோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

ஆனால், இவ்வளவு அழிவுகளையும் செய்த இந்திய சமாதானப் படையினர்தான் மேற்குறிப்பிட்ட நிவாரண வேலைகளையும் செய்துவருகின்றார்கள்.

அவர்கள்தான் நிவாரண வேலைகளைச் செய்யவேண்டும் என்பதை மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

அதேசமயம் இவ்வளவு சம்பவங்களுக்கும் மூலகாரணமாயிருந்த விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் அழிவு வேலைகளையே செய்துவருகின்றார்கள் —

போக்குவரத்தைச் சீர்குலைத்தல்;

பாடசாலை ஆசிரியர்கள் கடமைகளுக்குச்செல்கிறார்கள் என்பதற்காகவும், அரசாங்க அதிகாரிகள் கடமையில் ஈடுபடுகின்றார்கள் என்பதற்காகவும், தபால் ஊழியர்கள் கடமைக்குப் போகிறார்கள் என்பதற்காகவும் சுட்டுக் கொல்லப்படுதல்......

போன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்தவண்ணமே உள்ளனர்.

ஈழத்தில் இடைக்கால நிர்வாகம் ஏற்படும்வரை இந்திய சமாதானப் படையுடன் மிக அந்நியோன்யமாக இருந்த புலிகள் —

இடைக்கால நிர்வாகத்தில் மேலதிக் ஆசனங்கள் வேண்டவும், மற்ற இயக்கங்கள் இடைக்கால நிர்வாகத்தில் இடம் பெறக் கூடாது என்பதற்காகவும் பல எதிர்ப்பு நாடகங்களை நடத்தினர்.

அது உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள் என நடந்தன.



படிப்பகம்

www.padippakam.com

அதன் தவிர்க்க முடியாத தொடர்ச்சிதான் இந்தியப்படையுடன் புலிகள் போரில் இறங்கியமையாகும்.

நீண்ட தூரப் பார்வையற்ற இவர்களின் வரட்டுத்தனமான கொள்கைகளும் நடவடிக்கைகளும் தொடர்ந்தும் எமது மக்களைக் கொலைக்களத்துக்கு அனுப்புவதாக மட்டுமே உள்ளன.

இந்தியப் படையினர் மேற்குறிப்பிட்ட தவறுகளின் மத்தியிலும் கூட தமிழ் மக்களிற்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நல்லுறவுகளையும், பரஸ்பர நம்பிக்கைகளையும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவர —

புலிகள் இயக்கமானது தமிழ் — முஸ்லிம் விரோதங்களும், பகைமைகளும் வளர்வதற்கான நடவடிக்கைகளையே தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் ஒப்பீட்டு ரீதியாக இன்றைய சர்வதேச, உள்நாட்டு அரசியல் அடிப்படையில் எமது மக்களின் நண்பர்கள் யார்? விரோதிகள் யார்? எனத் தீர்மானிக்க வேண்டியவர்களாகவே நாம் உள்ளோம்.

அன்பிற்கினிய தோழர்களே— நண்பர்களே!

எமது மக்கள் — இந்திய அரசு எனத் தொடர்புபடுத்திப் பார்க்கையில், இலங்கையில் சிறீலங்கா அரசு என்ற ஒரு சக்தியும் இருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

இலங்கையில் இந்தியப்படைகள் இருந்தாலும், அரசு என்ற வகையில் எமது மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அரசு இந்திய அரசு அல்ல —

அது சிறீலங்கா அரசே ஆகும்.

சிறீலங்கா அரசு தொடர்பாகத்தான் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சக்திகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் உறவுகள் ஏற்பட்டன.

பல நிகழ்வுகள் — நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தியப் படைகள் எமது நாட்டுக்குள் 'அமைதி காக்கும் படை'களாக வரவேண்டிய நிலைமைகள் உருவானது.

அமைதிப்படை என்பதன் அர்த்தம் யாரும் எதையும் செய்ய அதைப் பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்கும்படை என்பதல்ல.



படிப்பகம்

www.padippakam.com

அவ்வாறான பிரச்சாரத்தை மேற்கொள்வது, முற்றில் குதர்க்கத்தனமானது அல்லது அறியாமையேயாகும்.

எந்தக் கூலிப்படையிடமிருந்தும் அதை எதிர்பார்க்க முடியாது.

எனினும் —

இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை இந்தியப் படைகள் தவிர்த்திருக்க முடியாதா? எனக் கேள்வி எழுப்புவோமாகில்......

நிச்சயமாக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பில் பெரும்மளவு விகிதாசாரத்தைத் தவிர்த்திருக்கலாம் —

அதற்கு இந்தியாவானது, முன்கூட்டியே புலிகளைப் புரிந்து வைத்திருக்க வேண்டும்.

இப்படியொரு யுத்தத்தை முன்கூட்டியே எதிர்பார்த்து, இழப்புக்களைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்குடன் திட்டமிட்ட தயாரிப்புக்களை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும்.

அவ்வாறு நடந்திருந்திருந்தால், இந்தியப் படையிலுள்ள சில தனி நபர்கள் ஆங்காங்கே விடக்கூடிய சில தனிப்பட்ட குற்ற விவகாரங்களைத் தவிர, பெருமளவில் பாதிப்புக்களைத் தவிர்த்து இருக்கலாம்.

ஐப்பசி 10ம் திகதிக்கு முன்னர் இந்திய அரசாங்கம் கண்மூடித்தனமாக எல்லாவற்றிற்கும் புலிகளுக்குப் பின்னால் போனது. அதன் விளைவு —

புலிகளால் இந்தியப் படைகள் தாக்கப்பட்டபோது, இந்தியப்படையினர் கட்டுப்பாடற்ற வகையில் கண்மூடித்தனமாக நடந்துகொண்டனர்.

மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு அடிப்படைப் பொறுப்பு புலிகளையே சாருமாயினும்,

இவ்விடயத்தில் இந்தியாவின் பொறுப்பும் புறக்கணிக்கப் படமுடியாதது என்ற வகையிலேயே மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நாம் இந்திய அரசிடம் நிவாரணம் கோரியுள்ளோம்.

வெளிப்படையாக நாம் இந்தியப் படைகளுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடாதபோதிலும் —



படிப்பகம்

www.padippakam.com

இந்திய அரசு, அதிகாரிகளிடம் இந்திய அரசின் தவறுகளையும், பொறுப்புக்களையும், மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களையும் திட்டவட்டமாகக் கூறிவந்துள்ளோம்.

இந்தியப் படையினரின் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு திருத்தங்களும் துரிதமான நிவாரண வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுவரும் அதேவேளை —

தனது இராணுவ பலத்தை இழந்து கொண்டிருக்கும் புலிகள் இயக்கமானது கொலை, கொள்ளை ஆகிய மக்கள் விரோதச் செயல்களை மிக அதிக அளவில் துரிதமாக்கியிருக்கின்றது.

பாசமிகு தோழர்களே — நண்பர்களே!

இந்தியாவுடனான நட்பு விடயத்தைப் பற்றிய நமது அணுகுமுறையில் நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு அம்சம் 'சர்வதேச அரசியலில் இந்தியா' என்பதாகும்.

இன்றைய உலகில் சர்வதேச ரீதியாக நடைபெறும் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டங்கள், தேசிய விடுதலை இயக்கங்கள், வர்க்கப் போராட்டங்கள் தொடர்பாகவும், சோஷலிச நாடுகளுடனான உறவுகள் தொடர்பாகவும் —

இந்தியா சர்வதேச அரசியலில் வகிக்கும் பாத்திரத்தை, அது கடைப்பிடிக்கும் மூல உபாயங்களை, தந்திரோபாயங்களை நாம் சரியாகக் கணிப்பிட்டுக்கொள்ள வேண்டும்.

நமது புரட்சிக்கும், சர்வதேச ரீதியாக நடைபெறும் புரட்சி நடவடிக்கைகளுக்கும் பிரிக்க முடியாத உறவுகள் உள்ளன.

நமது புரட்சியை நாமே நடத்தவேண்டும் எனினும்,

—அது இறக்குமதி செய்யப்பட முடியாதது எனினும் —

அது சர்வதேச அரசியல் விவகாரங்களிலிருந்து தனிமைப்பட்டு நிற்கும் ஒரு செயல்பாடாக அமைய முடியாது.

இந்தியாவிற்கும் எமக்கும் இடையே உள்ள உறவென்பது, எவ்வாறாயினும் அது வெளிநாட்டு உறவேயாகும்.

இந்தியாவோடு நமக்குள்ள உறவைத் தீர்மானிப்பது என்பது எமக்கும் இந்தியாவுக்கும் இடையேயான சர்வதேச உறவைத் தீர்மானிக்கின்ற விடயமே தவிர, உள்நாட்டு உறவுத் தன்மையை அடிப்படையாகக் கொள்ளாது.

'இந்திய அரசு ஒரு முதலாளித்துவ அரசு'...... 'நாமோ முதலாளித்துவ அமைப்பை மாற்றப் போராடுகின்றவர்கள்'...



படிப்பகம்

www.padippakam.com

என்பதில் இருந்து நாம் இந்திய அரசுக்கு எதிராகப் போராட்டம் நடாத்த வேண்டியவர்கள் என்ற முடிவுக்கு நாம் வரமுடியாது.

இந்திய முதலாளித்துவ அரசோடும் அதன் அமைப்போடும் கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டியவர்கள் இந்திய மக்களும் இந்தியப் புரட்சியாளர்களுமே தவிர, எமது ஸ்தாபனமோ எமது மக்களோ அல்ல.

இதேவேளை, இந்தியாவில் உள்ள உழைக்கும் மக்களுக்கும், எமது தேசத்தில் உள்ள உழைக்கும் மக்களுக்கும் உள்ள உறவு என்பது சர்வதேச உழைக்கும் மக்களுக்கிடையேயான வர்க்க உறவேயாகும்.

இந்திய முதலாளித்துவ அமைப்போடும், அதன் அரசோடும் கணக்குத் தீர்த்துக்கொள்ளும் உரிமையும் கடமையும் எமக்கு எப்படி இல்லையோ,

அதைப்போலவே அதற்கு முட்டுக்கொடுக்க வேண்டிய அவசியமும் எமக்கில்லை — அதை நாம் செய்யப்போவதுமில்லை.

இந்தியாவானது சர்வதேச அரசியல் விவகாரத்தில் ஏகாதிபத்தியத்தின் கூட்டாளியாகச் செயற்படாதவரையில்தான் எமக்கும் இந்திய அரசுக்கும் இடையில் நட்புறவு இருக்கும் என்பதை —

இந்திய அரசு அதிகாரிகளிடம் நேரடியாகவும், வெளிப்படையாகவும், உறுதியாகவும் பல தடவைகள் கூறியிருக்கின்றோம்.
இந்த அடிப்படையில் நாம் இந்தியாவோடு கொள்கை ரீதியில் வரையறுக்கப்பட்ட உறவைக் கொண்டிருக்கிறோமே தவிர,

மாறாக, வெளியில் ஒரு போக்கும் உள்ளே இன்னொரு போக்கும்... எனக் கள்ளத்தனமான உறவைக் கொண்டிருப்பவர்கள் அல்ல.

இந்தியாவை எதிர்ப்பது மட்டும் புரட்சிகர நடவடிக்கை ஆகிவிடமுடியாது.

இந்தியாவை எதிர்ப்பவர்கள் அனைவரையும் நாம் மதிப்பீடு செய்வோமாகில் இவ்விடயத்தை நாம் புரிந்தவர்களாவோம்.

பணத்துக்காக, ஆயுதங்களுக்காக, பதவி அதிகார பகிர்வுகளுக்காக நாம் இந்தியாவோடு உறவு கொண்டிருக்கவுமில்லை;



படிப்பகம்

www.padippakam.com

மறுபக்கம் அவற்றிற்காக இந்திய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் கொள்கையற்றவர்களுமல்ல.

இதேவேளை —

எதிர்காலத்தில் எமது புரட்சிப் பாதையில் இந்தியாவானது சிறீலங்கா முதலாளித்துவ அரசின் பாதுகாவலனாக நின்று, எமது மக்களின் புரட்சிக்கெதிராக இந்திய அரசானது படை நடத்துகின்ற நிலையொன்று ஏற்படுமாகில் —

அப்போது நாம் இந்தியப்படைகளுக்கு எதிராகப் போராட்டம் நடாத்த வேண்டி ஏற்படும்.

அவ்வாறல்லாத காலம்வரை —

இந்திய அரசுக்கு எதிராகப் போர் நடத்த வேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

இதில் நாம் ஊசலாட்டம் இன்றித் தெளிவாக நின்று செயற்படுதல் வேண்டும்.





படிப்பகம்

www.padippakam.com

# 2

**யதார்த்தத்தைப் புரிந்து கொள்வோம்!**
**சரியான பாதையில் நடைபோடுவோம்!**
**புரட்சிகர மாற்றத்திற்கு வழிவகுப்போம்!**

**அன்பார்ந்த தோழர்களே!**

- எமது ஸ்தாபனம் இலங்கை—இந்திய சமாதான ஒப்பந்தத்தை ஏற்று எம்மிடமிருந்த ஆயுதங்களை முறையாக ஒப்படைத்துவிட்டு, சட்டபூர்வமான முறைகளில் செயற்படத் தொடங்கியது;

- அமைதியும் ஜனநாயகமும் தானாகவரும் என்று காத்திருக்காமல் அவற்றை உருவாக்குவதற்காக உழைக்கத் தொடங்கியது. அமைதிக்கும் ஜனநாயகத்திற்கும் எதிரானவர்களுக்கு எதிராகப் போராடி வருகின்றது;

- நாம் விரும்பியோ விரும்பாமலோ இன்று வடக்கு கிழக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான நிறுவனமாக இந்தியப்படைகளை அங்கீகரித்தேயாக வேண்டியிருக்கிறது. அமைதியையும் குறைந்த பட்ச ஜனநாயகத்தையும் உருவாக்கவேண்டுமானால், இந்தியப்படைகளோடு ஒத்துழைத்துச் செயற்படுவது அவசியமானதுவும் தவிர்க்கமுடியாததுவும் என்பதைப் புரிந்துகொண்டு உறுதியோடு செயற்பட்டோம்... செயற்பட்டு வருகிறோம்;

- எமது ஸ்தாபனத்தை சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியாகப் பதிவுசெய்து கொண்டோம்; எல்லா விடயங்களிலும் வெளிப்படையாகச் செயற்பட்டு வருகிறோம்.

இவ்வாறு, நாம் காலத்தினதும் தேவையினதும் நிலைமைகளைப் புரிந்துகொண்டு செயற்பட்டுவருவதைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களும், எமது இயக்கத்தைச் சீரழித்து விடவேண்டும் என்ற கெட்ட நோக்கம் கொண்டவர்களும் எமது இயக்கத்திற்கு எதிரான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகிறார்கள். இது தொடர்பாக நாம் விழிப்பாக இருந்து செயற்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

**இடது, வலது அதிதீவிரங்களை இனங்கண்டு கொள்வோம்**
**எமது காலடிகளை உறுதியோடு எடுத்து வைப்போம்.**

எமது ஸ்தாபனத்தின் இன்றைய நிலைப்பாடுகளை அதி தீவிர இடதுசாரிவாதிகள் ஜீரணித்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அவ்வாறான சக்திகளை நாம் திருப்திப்படுத்துவதற்காக நாமும் அதிதீவிர இடதுசாரி வாதத்திற்குள் விழுந்து போய் விடக் கூடாது.

இதேவேளை, இன்று 'தேசபக்தர்கள்', 'தியாகிகள்', 'தமிழ் இன உணர்ச்சி படைத்தவர்கள்', வேஷம் போட்டு நிற்கும் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளும் எமது ஸ்தாபனம் இன்னும் அழிந்துபோய்விடவில்லையே என்று மிகவும் அக்க றையோடு கவலைப்படுகிறார்கள்.

இந்த சக்திகளின் நரித்தனமான சூழ்ச்சிகளையும் நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதிதீவிர இடதுசாரித்தனமும் வலது சாரி சந்தர்ப்பவாத மும் ஒரு சரியான புரட்சிகர இயக்கத்திற்கு எதிராக அடிக்கடி கூட்டுச் சேர்ந்துகொள்வதை உலக வரலாற்றின் எல்லாச் சந் தர்ப்பங்களிலும் எம்மால் கண்டுகொள்ள முடியும்.

**தோழர்களே!**

எமது ஸ்தாபனத்தை எப்படியாவது மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்படுத்திவிட வேண்டுமென்றும், எமது தோழர்களுக்கும் இந்தியப் படைகளுக்குமிடையில் மோதல் ஒன்றை உருவாக்கி விட வேண்டுமென்றும், எமது ஸ்தாபனத்திற்குள் சீர்குலைவு ஒன்றை உருவாக்கி விடவேண்டும் என்றும் பலசக்திகள் முயற் சிக்கின்றன.

இந்தத் தீய சக்திகளின் உள்நோக்கத்தைப் புரிந்து கொள் ளாமல், நாங்கள் பாமரத்தனமாகவோ குழந்தைத்தனமாகவோ மேற்கூறப்பட்ட சக்திகள் பரப்பிவரும் கருத்துக்களை வெறு மனே முகமதிப்போடு மட்டும் பார்த்து விடக்கூடாது.

நாங்கள் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை விட்டுக்கொடுத்து விட்டதாகப் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

நாங்கள் சமுதாயப் புரட்சியை மறந்துவிட்டதாகக் கூறித் திரிகின்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

எமது ஸ்தாபனம் ஒரு தேர்தல் கட்சியாக மாறிவிட்டதாகக் கொச்சைப்படுத்தித் திரிகிறார்கள்.....

**தோழர்களே!**

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை முழுமையாக நிலைநிறுத்துவதற்கான போராட்டமும், இலங்கை முழுவதுவும் வாழும் உழைக்கும் மக்கள் அனைவரினதும் வாழ்வில் விடிவை ஏற்படுத்துவதற்கான சமுதாயப் புரட்சிப் போராட்டமும்,

எதிர்காலத்தில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்படமுடியாதவையாகவே அமையும்.

அதை நோக்கிய மாறும் காலகட்டமே இலங்கையின் இன்றைய அரசியல் வரலாற்றுக் கட்டமாகும்.

இந்த மாறும் காலகட்டம் தானாக இயங்கும் என்று கருதிக் கொண்டு நாம் செயலற்றவர்களாக, அதிதீவிரவாதக் கருத்துக்களை யதார்த்தச் சூழ்நிலைகளுக்குத் தொடர்பற்ற வகையில் பேசித்திரியும் வாய்வீச்சுவல்லுனர்களாக இருக்க முடியாது.

ஓர் உண்மையான சமுதாய ஓட்டத்திலிருந்து நாம் ஒதுங்கியோ தனிமைப்பட்டோ இருக்க முடியாது.

ஒவ்வொரு வரலாற்றுக்கட்டத்திலும் புரட்சியாளன், தனக்குரிய வரலாற்றுப் பாத்திரத்தை நன்கு உணர்ந்து சரியான முறையில் ஆற்றியாக வேண்டும்.

புரட்சியாளன் எந்தவொரு காலகட்டத்திலும் வெறுமனே ஒரு பார்வையாளனாக இருக்கமுடியாது. அது அவனுக்குச் சமுதாய நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும்.

இந்தத் தெளிவும் உணர்வும் எமக்கு அவசியமாகும்.

> முதலாளித்துவம் தனது சவக்குழியைத் தானே
> தோண்டிக் கொள்கிறது.
> பாசிசத்தின் கொலை வெறியோ எண்ணற்ற சவக்
> குழிகளை நிரப்புகிறது.

இன்றைய நிலமைகளை மேலோட்டமான பார்வையாகப் பார்க்கும்போது அவை குழப்பமாகத் தோற்றமளிக்கின்றன என்பதனால் நாம் இந்தக் காலகட்டத்தில் ஓய்வு எடுத்துக் கொள்ளவோ ஒதுங்கி இருக்கவோ முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

இயக்கம் என்பது தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பது. அதை இயங்கா நிலையில் ஒரு குறிப்பிட்ட கண நேரத்திற்குக்கூட வைத்திருக்க முடியாது.

அவ்வாறேதான் ஒரு புரட்சிகர இயக்கமும் அமையும். புரட்சிகர அரசியல் இயக்கத்தின் அங்கமாக இருக்கமுனையும் ஒரு ஸ்தாபனமும் தொர்டர்ச்சியாக இயங்கிக் கொண்டேயிருக்க வேண்டும்.

ஒரு ஸ்தாபனம் தொடர்ச்சியாக இயங்குதல் என்பது புற நிலை யதார்த்தங்களைப் புரிந்துகொள்ளாமல் கண்ணை மூடிக் கொண்டு செயற்படுதல் என்பதாகாது.

புரட்சி என்பதை அவசரத்தில் செய்ய முடியாது.

ஒரு பக்கத்தில் பேரினவாதமும், மறுபக்கம் தமிழ்க்குறுநில வாதமும் தலைதூக்கி நிற்கின்றன.

இவை வெறுமனே மொழிசார்ந்த உணர்வுகளாக மட்டும் இல்லை. மாறாக, ஒன்றுக்கொன்று மாற்றுக் கொலைவெறித் தனத்தை உள்ளடக்கியவையாக உள்ளன.

தொழிலாளர் வர்க்கத்தினதும் மற்றும் உழைக்கும் மக்களினதும் புரட்சிகர வர்க்க உணர்வானது, இந்த இனவாதத்தில் ஆழப் புதைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனவாதங்கள் ஒன்று மற்றதன் ஜனநாயக உரிமைகளை நிராகரிப்பது மட்டுமல்லாது, ஒவ்வொன்றும் தத்தமக்குள்ளேயே அடிப்படை ஜனநாயக மறுப்பையும், புரட்சிகர முற்போக்கு சக்திகளை வேட்டையாடுவதையும் பண்பாகக்கொண்டிருக்கின்றன.

பாசிசக் கொலை வெறியைப் பாராட்டித் தட்டிக்கொடுத்து வளர்க்கும் இந்த இனவாதங்கள் சமுதாயத்தின் முன்னோக்கிய நகர்வை கொஞ்சம் கூட அனுமதிப்பவையாக இல்லை.

இந்த நிலையில், இலங்கையிலுள்ள புரட்சியாளர்களின் வரலாற்றுக் கடமை என்ன?

அடிப்படை ஜனநாயகத்திற்காகப் போராடுவதா இல்லையா?

கொலைகாரத்தனமான இனவெறியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதா இல்லையா?

இனவாதத்தின் பிடியிலிருந்து தொழிலாள வர்க்கத்தை மீட்டெடுப்பதா இல்லையா?



படிப்பகம்

www.padippakam.com

புரட்சிகர அரசியலின் முளையைக்கூட அனுமதிக்காத பாசிசத்தை அழித்தொழிப்பதா இல்லையா?

அல்லது....

பாசிச இனவெறியர்களுக்கு விட்டுக்கொடுத்து, அவர்களின் அணியிற் சேர்ந்து இலங்கை, இந்திய முதலாளித்துவ அரசுக்கு எதிராகப் போராடுவதா?

அதிகார வெறிபிடித்தலையும் பாசிச இனவெறியாளர்களோடு சமூகப் புரட்சியாளர்கள் இணக்கம் காணமுடியுமா; அவர்களின் அணியில் இவர்கள் சேரமுடியுமா?

ஒப்பீட்டு ரீதியில் எதனோடு சேர்ந்து எதற்கெதிராகப் போராடுவது?

தொழிலாள வர்க்கத்திற்கும் புரட்சிகர சக்திகளுக்கும் முற்போக்கு என்பது என்ன அர்த்தத்தைக் கொண்டது?

பாசிச இனவெறியர்களோடு கூட்டுச் சேரும் ஒரு 'தேச பக்தி' எந்த வகையில் முதலாளித்துவத்தைவிட முற்போக்கானது?

பாசமிகு தோழர்களே!

மேலே அடுக்கப்பட்டுள்ள கேள்விகளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி, அவற்றுக்கான விடைகளை மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் பெற்றுக்கொள்ளவில்லையாயின்—

நமது இன்றைய வரலாற்றுக் கடமைகள் என்ன என்பதை நாம் முடிவு செய்யமுடியாதவர்களாக ஆகிவிடுவோம்.

மேற்குறிப்பிட்டுள்ள கேள்விகளுக்கு நீங்கள் தெளிவான விடைகளைப் பெற்றுக்கொள்வீர்களாயின் மட்டுமே, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டையும், நடைமுறையையும் உங்களால் புரிந்து கொள்ளமுடியும்.

**சூழ்நிலைகளின் தேவைகளைத் தெரிந்து கொள்வோம்**
**பிற்போக்கு வியூகத்தைப் பிளந்து செல்வோம்.**

எங்கள் முன்னாலே பரந்து கிடக்கும் புறநிலை யதார்த்தங்களின் பண்புகளையும் இயக்கங்களையும் சரியாக வேறுபடுத்தியும் தொடர்புபடுத்தியும் அடையாளம் காணாமல்,

அவற்றைப்பற்றிய தெளிவான புரிதல் இல்லாமல்—



படிப்பகம்

www.padippakam.com

வெறுமனே முதலாளித்துவம், தொழிலாளவர்க்கம், சோஷலிசப்புரட்சி, மாக்சிய லெனினிசம் என சில சொற்களை உருப்போடுவதன் மூலமோ, அல்லது அச்சொற்களை வைத்துக் கொண்டு எண்கணிதம் போட்டுப் பார்ப்பதன் மூலமோ —

புரட்சிகர அரசியல் நடைமுறைக்கான வழிகாட்டுதலையோ புரிந்துணர்வையோ பெறமுடியாது.

மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்?,

மக்கள் என்ன நினைப்பார்கள்?,

என்ன செய்தால், என்ன சொன்னால் மக்கள் கவரப்படுவார்கள்?...

என்பவற்றின் அடிப்படையில் செயற்படுவது ஜனரஞ்சக அரசியல் வியாபாரமே தவிர, புரட்சிகர அரசியல் நடைமுறையாகாது.

புரட்சிகர அரசியல் நடைமுறை என்பது, மக்களிலிருந்து தனிமைப்பட்டோ பிரிந்தோ, மக்கள் அபிப்பிராயத்தைப் பற்றிக் கவலைப்படாமலோ இருப்பதாகாது என்றாலும்,

மக்களின் மேலெழுந்தவாரியான கருத்தின் பின்னால், 'கும்பல்லோகோவிந்தா' போடும் போக்கின் பின்னால் இழுபட்டுத்திரிவது என்பது ஒரு புரட்சியாளனுக்குச் சரியான மார்க்கமாகாது.

மக்களோடு இணைந்து நின்று, மக்கள் அபிப்பிராயத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு சரியானதை நோக்கி மக்களை முன்னோக்கிய பாதையில் அழைத்துச் செல்வதுதான் ஓர் உண்மையான புரட்சியாளனின் கடமையாகும்.

இன்றைய நிலைமைகள் தொடர்பாக மக்கள் என்ன பேசித் திரிகிறார்கள், மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்கட்டும் —

முதலில் நீங்கள் உங்களைத் தெளிவாக உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்; மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டும் வேலைத் திட்டத்தை இரண்டாவதாகப் பார்த்துக்கொள்ளலாம்.

புரட்சியாளர்கள் தமக்கு அவ்வப்போது ஏற்படும் கருத்துக் குழப்பத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு —

கற்றல்,
கேட்டல்,
சிந்தித்தல்



படிப்பகம்

www.padippakam.com

ஆகிய வழிமுறைகளைக் கையாள வேண்டுமே தவிர... அதற்கு மாறாக, தமது குழப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு மக்களைத் துணைக்கு அழைக்கும் போக்கைக் கடைப் பிடிப்பது மிகவும் தவறானதாகும்.

புரட்சிகர சித்தாந்தத்தின் மூலகர்த்தாக்கள், வீதிகளில் ஆட்கள் கூடிநின்று குசுகுசுவென்று என்னபேசிக் கொள்கிறார்கள் என்பதிலிருந்து சமுதாயக் கோட்பாட்டையோ புரட்சிச் சித்தாந்தத்தையோ வகுக்கவில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**உறுதிமிக்க தோழர்களே!**

எமது சமுதாயத்தில் உள்ளடங்கி ஒளிந்துகிடக்கும் பிற்போக்குத் தனங்களின் பிரதிபலிப்பே புலிகள்.

ஆனால் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, எமது சமுதாய எதிர்காலத்திற்கான தேவை என்பதை நாம் புரிந்து கொண்டால்தான் எமது நிலைப்பாடுகளையும் கடமைகளையும் வகுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் உறுதியோடு நாம் செயற்படமுடியும்.

அடுத்தவன் கொடுக்கும் கயிறை நாம் விழுங்கிக்கொண்டு திரியாமல்—

முதலாவது, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை பாதுகாப்போம்!

இரண்டாவது, அதனைப் பலப்படுத்துவோம்!

மூன்றாவது, அதனை வளர்ப்போம்!

இதுவே நமது சுலோகமாகட்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# 3

ஆற்றல்மிகு தோழர்களே!

இன்று நாம் எதற்காகப் போராடுகின்றோம்?
எவற்றுக்காகப் போராடவேண்டியுள்ளது?

எமது நீண்டகால நோக்கம் ஒரு சோஸலிசப் புரட்சியே எனினும்- அந்த நீண்டகால இலக்கை அடைவதற்கு இன்று உடனடியாக எம்முன்னால் உள்ள போராட்டங்கள் எவை என்பதை நாம் தெளிவுபடுத்திக்கொள்ளுதல் அவசியமாகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மக்களின் அடிப்படையான ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தையும்

கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் ஏற்பட்ட அழிவுகளைப் புனரமைப்பதற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வேலைத் திட்டத்தையும் முன்வைக்கின்றது.

இந்த இரண்டோடும் தொடர்பாகவே அமைதியின் அடிப்படைத் தேவையை வலியுறுத்துகிறது.

நாம் எதிர்காலத்தில் உழைக்கும் மக்களின் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமானால்,

தொழிலாள வர்க்கத்தின் ஆட்சி உருவாகும் நிலையைத் தோற்றுவிக்க வேண்டுமானால்,

இன்று மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தை நடத்தியே ஆக வேண்டும்.

நாம் ஜனநாயகம் என்னும்போது சிலர், சோஷலிசமும் உண்மையான ஜனநாயகமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவை என்பதைச் சொல்லி—

ஒன்றில்லாமல் ஒன்றில்லை என்னும் வாதத்தை நடத்த முற்படுகின்றனர்.

நாங்கள் இங்கே ஜனநாயகம் என்பதை வெறும் கருத்து உருவகக் கண்ணோட்டத்தில் பேசவில்லை.

இன்றைய சமுதாய வளர்ச்சி நிலையின் காலகட்டத்தோடு தொடர்புபடுத்தியே பேசுகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

இன்று எமது மக்களுக்கு மிகவும் அடிப்படையான ஜன நாயக உரிமைகளே மிகவும் அடிப்படைத் தேவையாக உள்ளன.

இந்த உரிமைகள் வென்றெடுக்கப்படாமல்,

இந்த உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம் நடத்தப்படாமல்—

எமது சமுதாயத்தை அடுத்த புரட்சிகர கட்டத்தை நோக்கி நகர்த்தவே முடியாது.

**தோழர்களே!**

நாம் மாக்ஸியத்தை உருப்போடுவதற்காகவோ,

அல்லது எமக்கும் மாக்ஸியச் சொற்பதங்கள் தெரியும் என்பதை மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகவோ அதனைக் கற்றவர்கள் அல்ல.

மாக்ஸிசம் என்பது ஒரு விஞ்ஞானம்.

புரட்சியைப் பற்றிய சரியானதும் முறையானதுமான அறிவையும் வழிகாட்டலையும் அது தருகிறது.

சமுதாயத்தின் ஒரு காலகட்ட வளர்ச்சி நிலையின் தேவையிலிருந்து அந்தக் காலகட்டத்திற்கான போராட்டமும் அமையும்.

அவையல்லாத போராட்டங்கள் மக்களிலிருந்து அந்நியப் பட்டவையாகவே அமையும்.

இனி—

முதலில் ஒருகுறிப்பிட்ட காலகட்டத்தின் சமுதாய வளர்ச்சி நிலைபற்றிய யதார்த்தபூர்வமான புறநிலை ஆய்வு தேவை.

இரண்டாவதாக, அக்காலகட்டத்தின் சமுதாய நிலை என்ன தேவையை நோக்கி நிற்கின்றது என்பதை அடையாளம் காண்பது அவசியம்,

மூன்றாவதாக, அத்தேவைகளை அடையாளம் காண்பதிலிருந்து போராட்டங்களை வரையறை செய்துகொள்வது கட்டாயம்.

நான்காவதாக, அக்குறிப்பிட்ட காலகட்டத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய போராட்டங்களை அடையாளம் காணுவதிலிருந்து நட்புசக்திகளையும் எதிரி சக்திகளையும் தெளிவாக இனம் பிரித்துக்கொள்வது பிரதானம்.



படிப்பகம்

www.padippakam.com

இந் நான்கு விடயங்களிலும் செம்மையான தெளிவான முடிவுகள் இருந்தால்தான்—

போராட்ட இலக்குகளை வென்றெடுப்பதற்கான மூல உபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகைசெய்யவும் நடைமுறையாக்கவும் முடியும்.

எழுந்தமானமாக நேர்மை, தூய்மை, போர்க்குணம் என் பவற்றின் பேரால் எல்லாவற்றையும் எதிர்த்தல்,

எல்லாவற்றிற்குமெதிராகவும் எல்லா நேரத்திலும் போராடு தல் என்பது குருட்டுத்தனமானதும் வரட்டுத்தனமானதுமாகும்.

இந்த அதிதீவிரப் போக்கைக் கடைப்பிடிப்பவர்கள் ஒன்றில் அதிதீவிர வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் ஆகின்றார்கள்.

அல்லது—

எல்லாமே பிழை, எல்லோருமே பிழையானவர்கள் என்று சொல்லிக் கொண்டு அரசியலைவிட்டு ஓடிஒதுங்கி விடுகிறார்கள்.

வைச்சால் குடுமி அடிச்சால் மொட்டை என நாம் செயற் பட முடியாது. எமது நீண்டகால இலக்கை நோக்கி நாம் நடைபோடுவதற்கு, இன்று எமக்கு முன்னால் உள்ள வரலாற் றுக் கடமை என்ன என்பதில் எமக்கு ஏற்படும் தெளிவுதான்—

எம்மைச் சரியான பாதையில் இட்டுச் செல்லும்;

எமது வரலாற்றுப் பங்கைச் சரியாக நிறைவேற்ற வழி வகுக்கும்.

ஈழ விடுதலையே தமது இறுதி இலட்சியம் என்று நினைத் துக்கொண்டு கடந்தகாலப் போராட்டத்தில் இணைந்து கொண்ட பலர்—

காலத்தின் மாற்றத்தை ஜீரணிக்க முடியாமலும்,

புதிய தேவைகளைப் புரிந்துகொள்ள முடியாமலும் ஒதுங் கிக் கொண்டுவிட்டார்கள்;

சிலர் நாட்டை விட்டே ஓடிவிட்டார்கள்.

ஆயுதம் தாங்கியபடி நடந்த போராட்டத்தை சோஷலிசப் புரட்சி என வேறொரு கோணத்தில் சிந்தித்து இணைந்த சிலர்—

ஏமாற்றத்துக்கும் விரக்திக்கும் உள்ளாகி, தமது அறியா மையைக்கண்டு கொள்ள ஆற்றலில்லாமல் மற்றவர்கள் மேல் பழியைச் சுமத்திக்கொண்டு அமைதியாகப் போய்விட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இன்னொரு பகுதியினருக்கு— ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு,

சமாதானம் என்ற சொல்லைக் காதால் கேட்பதற்குக் கூட வெறுப்பாயிருக்கிறது.

சிலர் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டம் என்பது சோஷலிசப் புரட்சிக்கு எதிரான— எதிர்ப்புரட்சிகர நடவடிக்கை என்று விளங்கிக் கொள்கிறார்கள்.

இப்படியாக, பலவகையான தவறான போக்குடையவர்களை இந்தக் காலகட்டத்தில் கண்டு கொள்ள வேண்டியிருக்கின்றது.

இது தவிர்க்க முடியாததாகும்.

குழப்பமான கருத்துகளுக்கு இரையாகிப் போயிருக்கும் சக்திகள், தமது குழப்பங்களைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிகளைத் தேடிக் கொள்ளாமல்,

மாறாக—

ஸ்தாபன வேலைத்திட்டங்களில் முனைப்போடு ஈடுபட்டிருக்கும் தோழர்களைக் குழப்புவதிலேயே கூடுதலான அக்கறை செலுத்தி வருவதையும் காணமுடிகின்றது.

அதையொட்டி நாம் விழிப்பாகவும் தெளிவாகவும் இருப்பது அவசியமாகும்.

அடுத்து,

எமது மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுதல் என்பது இரு பிரதான விடயங்களை உள்ளடக்கியிருக்கின்றது.

ஒன்று, தமிழ் மக்களுக்கு உள்ளேயே தோன்றியிருக்கும் ஜனநாயகவிரோத சக்திகளிடமிருந்து மக்களை விடுவிப்பது.

இரண்டாவது, சிறீலங்கா அரசினால் மறுக்கப்படும் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுவது.

**அன்பார்ந்த தோழர்களே!**

இன்றைய எமது மக்களின் உரிமைகளுக்காக நாம் சிறீலங்கா அரசுக்கு எதிராகப் போராட வேண்டுமாயின்—

எமது மக்கள் மத்தியில் ஒற்றுமை வேண்டும்;

எமது மக்கள் மத்தியில் அரசியல் இயக்கம் நடத்தப்படுவதற்கான ஜனநாயக உரிமை வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், இன்றைக்குத் தமிழ் மக்கள் மத்தியில் நடைபெறுவது—

கொலை வெறியர்களும், கொள்ளை வெறியர்களும், அதிகார வெறியர்களும் தமது சுயநல நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக—

மக்களைத் துன்புறுத்துகின்றனர்,

அடக்குகின்றனர்,

கொலைகளே மலிந்து போயிருக்கின்றது.

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகள் வாய் பேசா ஊமைகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அப்போதுதான் சிறீலங்கா அரசுக்கு எதிரான ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தைத் தமிழ் மக்கள் முனைப்போடு முன்னெடுக்க முடியும்.

தமிழ் மக்களின் எதிரிகள் தமிழ் மக்களினுடைய உரிமைகளுக்கான போராட்டம் சரியான வழியில் எழுச்சிபெற விடாமல் அடக்குவதற்காக—

கொலைகார, கொள்ளைக்காரக் கும்பல்களுக்கு மறைமுகமாக எல்லா வகையான உதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.

எனவே, இந்தக் கோடாரிக்காம்புகளை மக்கள் இனங்கண்டு துரத்தியடிக்கும் நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

உறுதிமிக்க தோழர்களே !

தமிழ் மக்கள், இந்தியப்படையின் தவறுகளை தட்டிக் கேட்க முடிகிறது;

ஆனால்—

புலிகளும் மற்றும் சதிகாரக் கும்பல்களும் தமிழ் மக்களின் குரல் வளையை நசுக்கி வருகின்றார்கள்;

தமது அரசியல் வியாபாரத்திற்காகக் கொலை செய்து குவித்து வருகின்றார்கள்,

எனவே, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தில் மிகவும் முக்கியமாக,



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் மக்களுக்கு உள்ளேயே இருந்து செயற்படும் ஜனநாயக விரோத சக்திகளுக்கு எதிராகப் போராடவேண்டியிருக்கிறது.

இதேவேளை,

தமிழ் மக்களின் தேசிய இன உரிமைகளை வென்றெடுக்கும் விடயத்தில் சிறீலங்கா அரசுக்கு எதிராக—

1— சிறையிலுள்ள இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி போராடுதல்.

2—மலையக மக்களின் வாக்குரிமை மற்றும் குடியுரிமை விடயத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஏமாற்று நாடகங்களுக்கு எதிராகப் போராடுதல்,

3—வடக்கு—கிழக்கு ஒருங்கிணைந்த மாகாணசபைக்காகவும், அந்த மாகாணசபையின் அதிகாரங்கள் உயர்ந்த பட்சம் அதிகரிக்கப்படுவதற்காகவும் போராடுதல்,

4—அகதிகளாக்கப்பட்ட எமது மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான உரிமைகளுக்காகப் போராடுதல்,

5—சிறீலங்கா இராணுவத்தினாலும், சிங்களக் காடையர்களினாலும் இன்னும் அவ்வப்போது தமிழ் மக்களுக்கு ஏற்படும் ஆபத்து தொடர்பான பாதுகாப்பு உரிமைகளுக்காகப் போராடுதல்......

ஆகிய விடயங்களை நாம் முன்னெடுத்தல் வேண்டும்.

இதேவேளை, இந்தியப்படைகள் ஆங்காங்கே அடிக்கடி விடும் தவறுகள், மக்களுக்கு ஏற்படுத்தும் துன்புறுத்தல்கள் தொடர்பாகக் குரல் எழுப்புதல்—போராடுதல் என்பதை மேற்கொள்ளுதல் வேண்டும்.

தோழர்கள் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் உறுதியும் தெளிவுமே எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கும் பலத்திற்கும் வழிவகுக்கும்.

புலிகளையும் மற்றும் கொள்ளையர்களையும் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருக்கும் பகுதிகளில் எமது ஏனைய அரசியல் வேலைத்திட்டங்களையும்,

ஸ்தாபனரீதியான வேலைத்திட்டங்களையும் நாம் துரிதமாக முன்னெடுத்தல் வேண்டும்.

புலிகளும் மற்றும் கொள்ளையர்களும் இன்னும் வெறியாட்டம் போடும் பகுதிகளில் அவர்கள் கொட்டத்தை அடக்கி,



படிப்பகம்

www.padippakam.com

அங்கு ஜனநாயகச் சூழலை உருவாக்கி—

மக்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களைப் பேசவும் நடமாடவுமான நிலைமையை ஏற்படுத்துவதற்கான மூலோபாயங்கள் தந்திரோபாயங்களை வகுத்து அவற்றை நடைமுறைப் படுத்தல் வேண்டும்.

அமைதி,

ஜனநாயகம்,

புனரமைப்பு,

இதுவே எமது இன்றைய வேலைத்திட்டங்களின் அடிப்படைகளாகட்டும்!





படிப்பகம்

www.padippakam.com

# 4

**அன்பார்ந்த தோழர்களே!**

நாம் எந்தவொரு விடயத்தையும் சாதிப்பதற்கு மக்களின் அபிப்பிராயங்கள், பங்களிப்புக்கள் மிகவும் அடிப்படையான பாத்திரத்தை வகிக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

எனவே நமது எதிர்கால இலக்குகளை வென்றெடுப்பதற்கு நாம் மக்களின் நல்லபிப்பிராயங்களை வென்றெடுப்பது அவசியமாகும்.

நாம் மக்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் வென்றெடுக்க முடியுமா என்றால் அது சாத்தியமாகாது என்பது உண்மையேயாயினும், மக்களின் பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயங்களை நாம் வென்றெடுப்பது சாத்தியமாகும்.

அதுவே தேவையுமாகும்.

உழைக்கும் மக்களை என்றென்றைக்கும் அடக்கி ஆளவேண்டும், சுரண்டிக் குவித்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்றிருக்கும் கூட்டத்தினரை, பிரிவினரை நாம் வென்றெடுக்க முடியாது என்பது உண்மைதான்.

அந்தக் கூட்டத்தினர் தமது பணவலிமையாலும், அதிகார வலிமையாலும் மக்கள் மத்தியில் செல்வாக்குகளை ஏற்படுத்திக் கொண்டு எம்மை மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்படுத்துவதற்கான முயற்சியில் எப்போதும் ஈடுபட்டுக்கொண்டே இருப்பார்கள்.

நுனிப்புல் மேயும் புத்திசாலிகளும்,

ஆளும் வர்க்கத்திற்கு சேவைசெய்வதன் மூலம் தமது சொந்த அபிலாசைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்றிருக்கும் ஒரு பகுதி புத்தி ஜீவிகளையும் நாம் திருத்தவும் முடியாது.

ஏனெனில்—

அவர்கள் நித்திரை செய்வதைப்போல் பாசாங்கு செய்பவர்கள். ஆனால், இவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்.

ஏனெனில், இவர்களே மக்களைக் குழப்பிவிடும், எமது ஸ்தாபனத்திற்கு எதிரான பிரச்சாரத்தை மிகவும் தந்திரமாக கிளப்பி விடும் பகுதியினர் ஆவர்.



படிப்பகம்

www.padippakam.com

இவர்கள் நடுநிலையாளர்கள், பக்கம் சாராதவர்கள் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டே இவ் வேலையைச் செய்கின்றனர்.

சாதாரண மக்கள் இவர்களால் ஏமாற்றப்படுவதே அதிகம்.

ஆகையினால் அந்த போலித்தனமான புத்திஜீவிகளுக்கு எதிராக நாம் விடாப்பிடியாகக் கருத்துப் போராட்டத்தை நடத்தியாக வேண்டியுள்ளது.

இதே போல் மற்றொரு விடயம் என்னவெனில்,

மக்கள் சுதந்திரமாகத் தமது சொந்த அபிப்பிராயங்களை அச்சமின்றிக் கூறும் நிலையை நாம் உருவாக்கவேண்டும்.

அப்பொழுது மக்களின் பெரும்பான்மையானவர்களின் உண்மையான அபிப்பிராயம் வெளிப்படும் நிலையை நாம் காணமுடியும்.

மக்கள் இன்று—

கொலை வெறியர்க்கும்,

கொள்ளை வெறியர்க்கும்,

அதிகார வெறியர்களுக்கும் அஞ்சி பேசாமடந்தைகளாய் தமது உயிரையும்,உடமைகளையும் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலிருந்து மக்களை விடுவித்து மக்கள் மத்தியில் ஒரு கருத்துச் சுதந்திரத்தை உருவாக்குவதே நமது இன்றைய வரலாற்றுக் கடமையாகும்.

அதை நாம் உருவாக்கவில்லையென்றால் எமது சமுதாயம் முற்போக்கான பாதையில் முன்னோக்கி நகர்வதற்கான எந்தவொரு காலடியையும் எடுத்து வைக்க முடியாது.

மக்கள் தம் நெஞ்சுக்குள் அடக்கி வைத்திருக்கும் கருத்துகள் வெடித்து வெளிவரும் நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

தோழர்களே!

இன்றைக்கு எமது மக்களுக்குத் தேவையான இந்தக் கடமையை நாம் ஆற்றுகின்றபோது நாம் மிகவும் நிதானமாகச் செயலாற்ற வேண்டும்.

எம்மைக் கண்டு பொதுமக்கள் அஞ்சுகின்ற நிலையை உருவாக்கி விடக்கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

நாங்களும் மற்றொரு மிருகக் கூட்டம்தான் என மக்கள் அபிப்பிராயப்படும் நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் நாம் எச்சரிக்கையோடும் அக்கறையோடும் செயற்படுதல் வேண்டும்.

மக்கள் மீது நாம் கொண்டிருக்கும் அக்கறை என்பது இலக்குத் தவறிப்போய்விடக் கூடாது என்பதில் நாம் எந்தவொரு கண நேரமும் விழிப்போடு செயற்பட வேண்டும்.

ஏனென்றால்—

எமது எதிரிகள் எமக்கு எதிராகச் சேற்றை வாரியிறைத்துப் பிரச்சாரம் செய்வதில் மிகவும் அக்கறையோடு ஒவ்வொரு விடயத்தையும் எதிர்பார்த்து இருக்கிறார்கள்;

நாம் எப்போது தவறுவிடுவோம் என்று காத்திருக்கிறார்கள்.

''இவர்களும் புலிகளைப்போன்றவர்களைச் சேர்ந்தவர்கள் தானே!'' என்று சொல்லிக்கொண்டு,

தமது கொலைத்தனத்தை மக்கள்மீது கட்டவிழ்த்து விடுவதற்கு இந்தக் கழுகுகள் காத்திருக்கின்றன என்பதை நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்து விடக்கூடாது.

இன்றைக்கு புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் மட்டும் தான் கருத்துச் சுதந்திரம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

ஏனைய மக்கள் அனைவரும் பேசமுடியா நிலையில் கொலை வெறியர்களால் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையை மாற்றுவதற்காக நாம் போராடுகின்றோம் என்பதன் அர்த்தம் நாமும் எமது ஆதரவாளர்களும் மட்டுமே கருத்துச் சுதந்திரம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல.

அப்படி நாம் நினைத்தால்— கருதினால் நாம் தவறானவர்கள் ஆவோம்.

நாம் போராடுவது மக்கள் அனைவரும் சுதந்திரமாக தத்தம் அபிப்பிராயத்தை— எந்த அபிப்பிராயமாக இருந்தாலும் சரி— அவற்றைப் பேசும் எழுதும் உரிமைவேண்டும் என்பதற்காகவேதான் என்பதை மறந்து விடக்கூடாது.

இவ்விடயத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமை மிகவும் கறாராகவே இருக்கும்.

இதில் எந்தத் தோழர் தவறு விட்டாலும் மன்னிக்கப் படமாட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

**உறுதிமிக்க தோழர்களே!**

எத்தனையோ இழிச் சொற்கள், பழிச்சொற்கள் பொய்ப் பிரச்சாரங்கள் ஆகியவற்றை இதயத்தில் தாங்கிக்கொண்டு ஸ்தாபனத்தின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் நீங்கள்—

மக்களோடு பண்பாகப் பழகுங்கள், மக்களோடு அன்பாகப் பழகுங்கள், துன்பப்படும் மக்களுக்கு உங்களால் முடிந்தளவு உதவி செய்யுங்கள்.

மக்கள் வதந்திகளையும் பொய்ப் பிரச்சாரங்களையும் நம்பி எமது ஸ்தாபனத்தைப்பற்றி அவதூறாகக் கதைக்கிறார்கள் என்பதற்காகப் பொறுமையை இழந்துவிடாதீர்கள்.

அவ்வாறான மக்களுக்குப் பொறுமையோடும் நிதானத்தோடும் விளக்கமளியுங்கள்.

போற்றுவோர் போற்றட்டும் புழுதி வாரியிறைத்துத் தூற்றுவோர் தூற்றினாலும் உங்கள் கருத்துக்களை உறுதியோடும் துணிவோடும் மக்கள் மத்தியில் முன் வையுங்கள்.

மக்கள் உடனடியாக உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொறுமையிழந்தோ, விரக்தியடைந்தோ விடாதீர்கள்.

உங்கள் கருத்துக்களை மீண்டும் மீண்டும் கூறுங்கள்.

மக்கள் ஒரு நாள் உண்மையைத் தெரிந்து கொள்ளத்தான் போகிறார்கள்.

அயோக்கியர்களையும் பொய்யர்களையும் அடையாளம் கண்டு கொள்ளத்தான் போகிறார்கள் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து மக்கள் மத்தியில் செயற்படுங்கள்.

எமது ஸ்தாபனத்தின் செயற்பாடுகள் மீதோ,

எமது ஸ்தாபன உறுப்பினர்கள் மீதோ மக்கள் முன் வைக்கும் விமர்சனங்களைக் கவனமாகச் செவிமடுத்துக் கேளுங்கள்.

மக்களின் அபிப்பிராயங்களைப் புறக்கணிக்காதீர்கள்.

மக்கள் முன்வைக்கும் விமர்சனங்கள் தொடர்பாக பரிகாரம் காணப்படும் என்பதை உறுதியாக முன் வையுங்கள்.

அவற்றை நடைமுறையாக்குங்கள்.

இதே வேளை—



படிப்பகம்

www.padippakam.com

மக்கள் முன்வைக்கும் விமர்சனங்களில் தவறுகள் இருக்காது என்பதில்லை.

மக்களின் விமர்சனங்களில் தவறுகளை நீங்கள் காண்கின்ற போது அந்த தவறுகளைச் சுட்டிக்காட்டி மக்களின் விமர்சனங்களை நெறிப்படுத்துவதும் உங்கள் கடமையே.

வதந்திகளையும் பொய்ப்பிரச்சாரங்களையும் நம்பி மக்கள் தவறு விடுகின்றனர் என்று ஆத்திரம் கொள்வதற்கு எமக்கு உரிமையில்லை என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

மாறாக, மக்கள் மத்தியில் சரியான கருத்துக்களைக் கொண்டு போவதற்கு எமக்கு உரிமையுண்டு என்பதேயாகும்

மக்கள் எம் மீதுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டுகையில் அதில்உண்மை இருந்தால் அதனைத் துணிவோடு ஒத்துக் கொள்ளுங்கள்.

அதனைத் திருத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை ஸ்தாபனம் எடுக்கிறது—எடுக்கும் என்பதை மக்களுக்கு விளக்குங்கள்.

ஈழப் போராட்ட காலகட்டத்தில் ஏற்பட்ட சரிகளையும் தவறுகளையும்,

வெற்றிகளையும் தோல்விகளையும்,
தியாகத்தனங்களையும் துரோகத்தனங்களையும் மக்களுக்குத் தெளிவாகவும் முறையாகவும் விளக்குங்கள்.

கொலைகாரரும், கொள்ளைக்காரரும் எப்படிச் செயற்படுகிறார்கள்,

அவர்கள் மக்களை ஏமாற்றுவதற்காக மேற்கொள்ளும் தந்திரங்கள் என்னென்ன,

அவர்களை மக்கள் எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது என்ற விடயங்களை மக்களுக்கு விளக்குங்கள்.

கொலைகாரர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் எதிரான எமது போராட்டத்தை எமது ஸ்தாபன உறுப்பினர்கள் மட்டுமே தனியே நடத்துதல் என்றில்லாமல் மக்களை முடிந்தளவுக்கு இணைத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு எமது ஸ்தாபன நடவடிக்கைகளிலும் மக்களையும் இணைத்துக் கொண்டால்தான் மக்களும் உண்மைகளைச் சுலபமாகக் கண்டறிந்து கொள்வார்கள், புரிந்து கொள்வார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

மக்களைவெறுமனே பார்வையாளர்களாக, ரசிகர்களாக மட்டும் வைத்திருந்தோமானால் நாம் மீண்டும் தவறுவிடுபவர் களாவோம்.

எமது ஒவ்வொரு நடவடிக்கையிலும் நாம் மக்களை எவ் வளவுக்கு எவ்வளவு இணைத்துக் கொள்கின்றோமோ அதிலே தான் எமது வெற்றியின் நிச்சயத்தன்மையும் நிரந்தரத்தன் மையும் தங்கியிருக்கிறது.

பாசமிகு தோழர்களே!

நெஞ்சுத்துணிவோடும் நேர்மையுள்ளத்தோடும் மக்களைச் சந்தியுங்கள்,

மக்களோடு கலந்துரையாடுங்கள்,

மக்கள் எழுப்பும் கேள்வி எதுவாக இருந்தாலும் பொறு மையோடு தெளிவாகப் பதிலளியுங்கள்.

மக்களின் அபிப்பிராயங்களில் நிலவும் தவறுகளை ஆத்தி ரமெதுவுமின்றி மிகவும் நுட்பமான முறையில் சுட்டிக் காட்டித் திருத்துங்கள்.

வேலைத் திட்டங்களில் மக்களை இணைத்துக் கொள்ளு ங்கள்,

மக்கள் அபிப்பிராயத்தை வென்றெடுங்கள்.

மக்களை நாம் வென்றெடுத்தால்
மக்கள் வரலாற்றை வென்றெடுப்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# 5

**அச்சத்தின் உச்சத்தில் வாழும் எமது அன்பிற்கினிய மக்களின் பரிதாப நிலையை மாற்றியமைக்கப் பாடுபடுங்கள்!**

**தோழர்களே!**

எமது மக்களின் நிலையென்ன?

தங்களைச் சுற்றி நடந்துகொண்டிருக்கும் விவகாரங்கள் தொடர்பாகத் தமது கருத்தை வாயைத் திறந்து சொல்வதற்கு அஞ்சுகிறார்கள்.

யாரைக் கண்டாலும் பயப்படுகின்றார்கள்.

தமது நண்பர்கள், உறவினர்கள் மத்தியில்கூட அச்சத்தில் மௌனிகளாகவே இருந்துவிட விரும்புகின்றார்கள்.
தாம் ஏதாவது வாய்தவறிச் சொல்லிவிட்டால்... அதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களில் எவராவது போய்ப் புலிகளுக்கோ, புளொட்காரர்களுக்கோ சொல்லிவிட்டால் —

தமது தலைக்குத் துப்பாக்கிக் குண்டு வந்துவிடுமோ என்று பயத்தில் மௌனமே சந்நிதானம் என்று கருதுகின்றார்கள்.

நல்லதும் வேண்டாம் பொல்லாததும் வேண்டாம் நமக்கென்ன நடப்பது நடந்துவிட்டுப் போகட்டும் என்றே படித்தவர்களும் சரி பாமரர்களும் சரி கருதுகின்றார்கள்.

ஹர்த்தால் என்று காதில் விழுந்தவுடனேயே அது ஏன்? யாரால் செய்யப்படுகின்றது? என்றுகூட மக்கள் கவனிப்பதில்லை.

மாறாக, கடையைப் பூட்டிவிட்டால், வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்துகொண்டால்... தமக்குத் தொல்லையில்லை தமக்கு எதற்கு ஊர்வம்பு என்று நினைக்கிறார்கள் — அப்படியே நடந்தும் கொள்கிறார்கள்.

மக்கள் கடைகளைப் பூட்டுவதையும் நடமாட்டத்தைக் குறைத்துக் கொள்வதையும் வைத்துக்கொண்டு, கொலைகாரர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் மக்கள் ஆதரவு உண்டு என்று இந்த உலகம் நம்பும் நிலையேற்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தக் கொலைகார, கொள்ளைக்காரக் கூட்டத்திற்கு எமது மக்கள் அஞ்சி நடுநடுங்கி வாய்மூடி மௌனிகளாக இருப்பதை இந்த உலகம் புரிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் இன்னும் ஏற்படவில்லை.

மக்களின் கருத்துக்கள் அடைபட்டுப் போயிருக்கும் இந்தக் காலகட்டத்தில் எமது கடமையென்ன?

கொலைகார, கொள்ளைக்காரக் கூட்டத்தினரோடு போட்டி போட்டோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ மக்களின் வாயை அடைக்கும் வேலையை நாமும் செய்யப் போகிறோமா... அல்லது, மக்களின் சுதந்திரமான கருத்துக்கள் வெளிப்படும் காலகட்டத்தை உருவாக்கப் போகின்றோமா......?

என்கின்ற கேள்விக்கு நாம் விடைகாண்பது அவசியமாகும்.

நாம் இந்தக் காலகட்டத்தில் நடத்த வேண்டிய சமூகப் புரட்சி எத்தகையது என்பதைத் தீர்மானிப்பது மிகவும் பிரதானமானதாகும்.

எமது தேசத்தில் எங்கு பார்த்தாலும் கொலைகளும் அழிவுகளுமே மிஞ்சி நிற்கின்றது.

மக்களோ இது பற்றிய தமது அபிப்பிராயத்தை நாம் கேட்டாலும்கூடச் சொல்லத் தயங்கி நிற்கின்றனர் —

இன்னும் சொல்லப் போனால் சொல்லாமலே ஒதுங்கிவிடுகின்றனர்.

மக்களை ஆயுத முனையில் மிரட்டிப் பணம் பறிப்பவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுகின்றார்கள் என்று கூறமுடியாது.

கொலை மிரட்டல் மூலம் கடைகளை மூடப் பண்ணுபவர்கள்... வேலைகளுக்குப் போகாமல் செய்பவர்கள்... சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைப்பவர்கள்......
மக்களை அணிதிரட்டுகிறார்கள் என நாம் விளங்கிக் கொள்ளவோ — விளக்கமளிக்கவோ முடியாது.

அன்பார்ந்த தோழர்களே!

இன்று மக்கள் விரோதிகள் மக்களை ஆட்டிப்படைப்பதில் —மக்களை அடக்கி ஒடுக்குவதில் வல்லவர்களாக விளங்குகிறார்கள் என்பது உண்மைதான்.

மக்களின் அச்சத்தில் கொள்ளை லாபத்தைச் சுருட்டிக் கொள்ளும் சில கும்பல்களும்,



படிப்பகம்

www.padippakam.com

கொலைகார கொள்ளைக்காரக் கூட்டத்தினரோடு தமது கூட்டை வைத்துக் கொள்வதன் மூலம் தாமும் சண்டியர்களா கிக் கொள்ளும் சிலருமே—

இன்றைய நிலைமையைக் கண்டு பெருமைப்பட்டுக் கொள் ளவோ மகிழ்ச்சி கொள்ளவோ முடியும்.

மக்களை நேசிக்கும் எந்தவகையான சக்திகளும் இன்றைய நிலையை மாற்றி அமைக்க வேண்டுமென்பதிலேயே அக்கறை கொள்வர்.

**தோழர்களே!**

இன்றைய நிலையை மாற்றியமைப்பதற்கு குறைந்தபட்ச ஜனநாயக சக்திகளோடும் நாம் நட்பைக் கட்டிக் கொள்வது அவசியமாகும்.

நமது நட்பு சக்திகளை விரிவுபடுத்திக் கொள்வதாயின், அதற்குத் தக்கபடி விட்டுக் கொடுப்புகளும் அவசியமாகும்.

இதேவேளை, நாம் எவ்வளவுக்கெவ்வளவு நட்பு சக்தி களை விரிவுபடுத்திக் கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் ஓர் இறுக்கமான கட்சியாக ஆகிக்கொள்வது அவசிய மாகும்.

எனவே, நாம் நம்மை இந்தக் காலகட்டத்தில் உறுதியான கட்சியாக அமைத்துக் கொள்வதும் அவசியமாகும்.

கட்சியின் பெயராலும், கட்சி ஜனநாயகத்தின் பெயராலும் ஆங்காங்கே தலைதூக்கப் பார்க்கும் உதிரிப் போக்குகளை அவ்வப்போது களைந்து கொள்வதும் அவசியமாகும்.

இதிலும் மக்கள் தொடர்பான விவகாரங்களில் கட்சியின் எந்தப் பாகத்திலாவது அரா்ஜகப் போக்குத் தலைதூக்கினால் அதனை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும்.

நாம் ‘ஆயுதம் தாங்கிய ஓர் போராளிக் குழு’ அல்ல.

மாறாக, எமது ஸ்தாபனம் பரந்துபட்ட மக்களின் கட்சி என்ற நிலையை நோக்கிய மாறும் காலகட்டத்தின் ஆரம்பத்தில் இருக் கிறோம்.

எமது ஸ்தாபனம் உத்தியோக பூர்வமான வகையில் ஏழு ஆண்டுகால வரலாற்றைக் கொண்டுள்ள போதிலும் இன்றைய மாறும் காலகட்டத்தின் வகையாக ஒரு குழந்தை நிலையைக் கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

எமது ஸ்தாபனத்தைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் மிக வும் பக்குவமான முறைகளைக் கையாள வேண்டும்.

முரட்டுத்தனமான முறைகளைக் கையாண்டு இதனைச் சிர மித்துவிடுவதிலோ அல்லது முடமாக்கி விடுவதிலோ நாம் பெரு மைப்பட முடியாது.

தமது கோரப் பற்களைக் காட்டியபடி எம்மைச் சூழவர நிற்கும் ஆபத்துக்களை நாம் தெள்ளெனப் புரிந்துகொண்டு,

எமது ஸ்தாபனத்தைப் பாதுகாப்பதிலும் பலப்படுத்துவதி லும் வளர்ப்பதிலும் அக்கறையோடும் விழிப்போடும் செயற் படுவோம்.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் புலிகளுடனோ... அல்லது N.L.F.T யுடனோ இணைந்திருக்க வேண்டிய சிலபேர் தவறுதலாக எமது ஸ்தாபனத்துடன் இணைந்து கொண்ட தால், எமது ஸ்தாபனத்தின் பொதுப் போக்குடன் இணைந்து போகமுடியாமல் ஒதுக்கப்பட்டுப் போயினர்.

அவர்களிற் சிலர் 'ஈ.பி.ஆர்.எல்.எவ். இலிருந்து விலகிய வர்கள்' என்ற நாமத்துடன் புரட்சியின் தூய்மையான சொந் தக்காரர்கள் தாமே என்ற நினைப்புடன் உலாவரத் தொடங் கியிருக்கிறார்கள்.

எமது ஸ்தாபனத்தின் மீது கல்லெறிய நினைக்கும் இவர் கள், தம்மை அடையாளம் காட்டுவதற்குக் கூட எமது ஸ்தா பனத்தின் பெயரை அடைமொழியாகப் பாவிக்கும் நிலையி லேயே உள்ளனர்.

'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று உண்மைக்காக வாதாடுவதாகக் கூறும் இவர்கள், தமது அரசி யல் இருப்புக்காகப் புலிகளிடம் வரம் கேட்டு நிற்பதுதான் பரிதாபத்துக்குரியதாகும்.

இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆயுதங்களைத் தங்களுக்குக் காலதாமதமின்றி அனுப்பிவைக்க வேண்டுமென பிராந்திய உறுப்பிலிருந்துகொண்டு ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகத்துக்கு உத்தரவு பிறப்பித்த இந்த 'மார்க்ஸிய மாமே தைகள்' தான் இன்று—

அந்த ஆயுதங்களைப் பெற்ற தவறுகளினால்தான் ஈழப் போராட்டம் சிதைந்தது என இறந்தகால தீர்க்கதரிசனம் செய்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இது முன்னுரையல்ல....
"புதிய கண்ணோட்டம்"
மற்றும் "ஈழப் போராளி"
இதழ்களில் "இனிய தமிழ் மக்களே
என்னும் தலைப்பில் எழுதப்பட்ட
கட்டுரைகள் அனைத்தையும்
தொகுத்து நூலாக்கியிருக்கிறோம்
வெவ்வேறு காலகட்டங்களில்
எழுதப்பட்ட கட்டுரைகளாதலால்
அவ்வக் கட்டுரைகளின் தலைப்பிலேயே
அவை வெளியான பத்திரிகையின் பெயரையும்
திகதியையும் குறிப்பிட்டிருக்கிறோம்
எப்போதும் நாம்
எமது அன்பிற்கினிய தமிழ் மக்கள்
ஆபத்தை தெரிவு செய்து கொண்டு
அவஸ்தைகளுக்கு ஆளாகிவிடக் கூடாதென
எச்சரித்தே வந்திருக்கின்றோம்.
பிற்போக்கு வியூகத்தைப் பிளந்து
வாருங்கள்
ஒரு வளமான வாழ்வுக்காய்
கைகோர்ப்போம்

அன்புடன்
பிரச்சார வெளியீட்டுப் பிரிவு
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

படிப்பகம்

www.padippakam.com



● ● ● இனிய தமிழ் மக்களே!...... ● ● ●

''புதிய கண்ணோட்டம்''

''ஈழப்போராளி'' இதழ்களில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு ●

● புரட்டாதி 1988 ●

● ● ● தொகுப்பும் அமைப்பும்: ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சார வெளியீட்டுப் பிரிவு ●

● அச்சிட்டோர்: நவயுக அச்சகம் 119, பல்கலைக் கழக வீதி ரத்தனபிட்டிய ● ● பொரலஸ்கமுவ. ●

● விலை: ரூ 5/- ● ● ●

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

எமது மக்களுக்கு
இப்போது தேவை

சமாதானமும்
அமைதியுமே!

★ EPRLF ★

படிப்பகம்